சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.4/2022

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பெஞ்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசாமி | வயது | 75 |
| த/பெ | காளப்ப கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | சிக்காரம்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாயம் |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காள் பெயரில் உள்ள சொத்துக்களை எந்த வருடம், யார் முன்னிலையில் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சுமார் 50 வருடங்களுக்கு முன்னரே பாகம் செய்து கொண்டார்கள். கந்தப்ப கவுடர், நஞ்சப்ப கவுடர் உள்ளிட்ட சுமார் 20 பேர்கள் சேர்ந்து பிரித்துக் கொடுத்தார்கள். சொத்துக்களை பிரித்துக் கொடுத்ததாக கூறும் போது திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காள் உயிருடன் இருந்தார்களா என்றால் திருமப்ப கவுடர் இறந்து விட்டார். கெம்பக்காள் உயிருடன் தான் இருந்தார். கெம்பக்காள் தனது சொத்தை பிரித்து தருவதாக உயிருடன் இருந்த போது ஆவணம் ஏதாவது எழுதிக் கொடுத்தாரா என்றால் இல்லை. வாய்மொழியாக சொன்னார். அவ்வாறு பிரித்ததாக கூறிய பின்னரும் வருவாய் ஆவணங்களில் பெயர் எதுவும் மாறவில்லை என்றால் சரியல்ல. அவரவர் பெயருக்கு மாற்றிக் கொண்டோம். பாகம் பிரித்ததற்கு ஏதாவது ஆவணம் எழுதிக் கொண்டோமா என்றால் இல்லை. எனது தாத்தா திருமப்ப கவுடர் 1954 ன் ஆண்டில் இறந்து விட்டார். எனது பாட்டி 1967 ம் ஆண்டில் இறந்து போன இறப்பு

சான்றிதழை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி தான். திருமப்ப கவுடரின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். எனது தாத்தா திருமப்ப கவுடர் 1960 ம் ஆண்டில் இறந்து விட்டார் என்றும், வழக்கிற்காக 1954 ம் ஆண்டு என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி நாகராஜ் கோயமுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண். 1442/2000 என்ற வழக்கை தாக்கல் செய்து இருந்தார் என்றால் சரி தான். அந்த வழக்கு மேட்டுப்பாளையம் உரிமையியல் நீதிமன்றத்திற்கு பின்னர் மாற்றப்பட்டது. அந்த வழக்கு மேட்டுப்பாளையம் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 13/2005 ஆக எண் இடப்பட்டது என்றால் சரி தான். அந்த வழக்கு என் மீதும், எனது அப்பா மற்றும் எனது அம்மா மீதும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரி தான். அந்த வழக்கில் திருமப்ப கவுடர், காளப்ப கவுடர் மற்றும் கெம்பக்காள் ஆகியோர்கள் வாங்கிய சொத்துக்களில் பாகம் வேண்டும் என்று தான் பரிகாரம் கோரப்பட்டது என்றால் சரி தான். அந்த வழக்கில் நானும், எனது பெற்றோர்களும் எதிர் வழக்குரை தாக்கல் செய்து இருந்தோம் என்றால் சரி தான். அந்த வழக்கின் பிராதில் திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காளுக்கு ரங்கம்மாள், காளம்மாள் மற்றும் சுப்பம்மாள் ஆகிய 3 பெண் பிள்ளைகள் இருப்பதை சொல்லாமல் மறைத்து விட்டார் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையிலும், எனது தாத்தாவிற்கு 3 பெண் பிள்ளைகள் இருப்பதை மறைத்து விட்டோம் என்றால் சரியல்ல. அவருக்கு 3 பெண் பிள்ளைகள் இருந்ததையும், பாகத்தை பிரித்து கொடுத்ததையும் அந்த எதிர் வழக்குரையில் கூறி உள்ளேன். அவ்வாறு எதிர் வழக்குரையில் கூறவில்லை என்றும், தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

Sd/- G.Gengaraj,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.